# DHEERAN IAS ACADEMY®
(Specialized Institute for UPSC, SSC, TNPSC, TNUSRB and Banking)
Raj Rathna Building, Lawley Road Bus Stop, Maruthamalai Main Road, Coimbatore -03
Cell: 81783 18007, 93379 97597 Email: dheeraniasacademy@gmail.com


## நடப்பு நிகழ்வுகள் – மார்ச் 2023
## தமிழ்நாடு

- புலிகளை வேட்டையாடிவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழ்நாட்டில் புலிகள் இனமே அழிந்து விடும் என சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை செய்துள்ளது.
    - இந்தியாவில் வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972ல் நடைமுறைக்கு வந்து.
    - புலிகளை பாதுகாக்க இந்திய அரசு புலிகள் பாதுகாப்பு சட்டம் 1973ல் இயற்றியது.
    - இந்தியாவில் 53 புலிகள் காப்பகம் உள்ளன.
    - களக்காடு முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை, சத்தியமங்கலம் ஆகிய 4 புலிகள் காப்பகங்கள் தமிழகத்தில் உள்ளன.
    - 2018 கணக்கெடுப்பின்படி 2,967 புலிகள் இந்தியாவில் உள்ளன.
    - தேசிய அளவில் புலிகள் இறப்பு விகிதத்தில் தமிழகம் 6வது இடம் பிடித்துள்ளது.

- சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் குப்பை சேகரிப்பவர்களை தொழில் முனைவோர்களாக ஆக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
    - மாநகராட்சி சார்பில் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் "தேசிய சஃபாய் கரம்சாரி நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து இடத்திட்டம் செயல்படுத்துகிறது.

- சென்னை மாநகராட்சியில் பூங்கா பராமரிப்பு இணைய ஒப்பந்தம் மூலம் மருத்துவ பணியாளர்களை நியமிப்பதற்கு பதிலாக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் நியமிக்கபட வேண்டும் என சென்னை நகர மாமனற் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
    - மஞ்சள் பை திட்டம் மகளிர் சுய உதவிக்குழு மூலமாக செயல்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - மஞ்சள் பை திட்டம் – **23.12.2021**

- வெப்ப அலைகளையும், புதிய நோய்களையும் எதிர்கொள்ள தயராக வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
    - தமிழ்நாடு பசுமை இயக்கம் (**24.09.2022)** மூலம் மாநிலத்தின் காடுகளின் பரப்பளவை **21%**லிருந்து **31%**மாக அடுத்த பத்தாண்டுகளுக்குள்

உயர்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
    - **2070**க்குள் இந்தியா கார்பன் சமநிலையை அடையும் இலக்கிற்கு முன்பாக தமிழ்நாடு கார்பன் சமநிலை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- மார்ச் **5**-ல் சிவகங்கை மாவட்டம் கீழடியில் உருவாக்கப்பட்டுள்ள அகழ் வைப்பகத்தை தமிழக முதலவர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.
    - கீழடி அகழாய்வில் **1000**-க்கும் மேற்பட்ட குறியீடுகளும், **60**-க்கும் மேற்பட்ட தமிழ் பொறிப்புக் கொண்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
    - இந்த பானை ஓடுகளில் குவிரன் ஆதன், ஆதன் போன்ற தனி நபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
    - கீழடியில் கிடைக்கப் பெற்ற பொருள்கள் நகர நாகரிகத்துக்கான கூறுகளை வெளிப்படுத்தியுள்ளன

- குலசேகரப்பட்டினத்தில் அமைய உள்ள ராக்கெட் ஏவுதளம் மூலம் தென் இந்தியா பெரிதும் வள்ச்சியை அடையும் என இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.சிவன் தெரிவித்துள்ளார்.
    - இந்த ராக்கெட் ஏவுதளத்தில் சிறிய எஸ்எஸ்எல்வி ரக ராக்கெட்டுகள் ஏவப்பட உள்ளன.
    - விண்ணுக்கு மனிதனை அனுப்பும் சுகன்யான் திட்டத்திற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.
    - சந்திரயான்-**3** விண்ணில் செலுத்துப்படுவதற்கு தயாராகி வருகிறுது.
    - சூரியன் தொடர்பான ஆராச்சியை மேற்கொள்வதற்காக ஆதித்யா விண்கலமும் தயாராகி வருகிறது என தெரிவித்துள்ளார்

- "கள ஆய்வில் முதல்வர்" என்ற திட்டத்தின் கீழ் மதுரை, ராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை, தேனி மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடனான சட்டம்-ஒழுங்கு தொடர்பான ஆலோசனை கூட்டம் மதுரை ஆட்சியர் அலுவகலத்தில் நடைபெற்றுள்ளது.
    - கள ஆய்வில் முதல்வர் – **01.02.2023**

- சென்னை மாநகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் பேருந்தில் இயங்கும் நடமாடும் இதய பரிசோதனை மையத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்.
    - இப்பேருந்து வாரந்தோறும் செய்வாய், வியாழக்கிழமைகளில் மாநகராட்சிக்குட்பட்ட குறிப்பிட்ட நகர்ப்புற சுகாதார மையங்களில் முகாம்கள் மூலமாக கர்ப்பிணிகள் மற்றும் பொதுமக்களுக்கு இதய நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

- "இயற்கையை பேணுவோம்" என்ற தலைப்பில் சென்னை ராணி மேரி கல்லூரியில் "சிற்பி" திட்டத்தின் கீழ் ஒரே நேரத்தில் **5**லட்சம் விதை பந்துகளை தயாரித்து அரசுபள்ளி மாணவ மாணவிகள் சாதனை படைத்துள்ளன.
    - தமிழகத்தில் வனப்பரப்பை அதிகரிக்கும் வகையில் "பசுமை

தமிழ்நாடு” என்ற திட்டம் தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் தமிழகத்திலுள்ள **22.7%** வனபரப்பை **33%**மாக உயர்த்த வேண்டும் எனவும் முடிவு செய்ப்பட்டது.
  - பசுமை தமிழ்நாடு – **24.09.2022**
  - சிற்பி திட்டம் – **14.09.2022**

- மார்ச் **15-**ல் சென்னையில் அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உலக யுனானி தின விழா நடைபெற்றது.
  - யுனானி மருத்துவம் என்பது கிரேக்க-அரேபிய வைத்திய முறையாகும்.

- மார்ச் **16-**ல் “எண்ணும் எழுத்தும்” திட்டத்தால் குழந்தைகளை**,** ஆசிரியர்களிடம் ஏற்பட்டுள்ள தாக்கத்தை பொதுமக்கள் பெற்றோரிடையே எடுத்துச் செல்லும் வகையில் “எண்ணும் எழுத்தும் கற்றலைக் கொண்டாடுவோம்” என்ற தலைப்பிலான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கவுள்ளது.
  - தமிழகத்தில் குழந்தைகளிக்கிடையே ஏற்பட்ட கற்ற இடைவெளிக்கு தீர்வு காண **2022-**ல் “எண்ணும் எழுத்தும்” திட்டம் தொடங்கப்பட்டது.
  - இத்திட்டத்தின் தொலைநோக்கு பார்வையானது **2025-**ஆம் ஆண்டுக்குள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை **8** வயதுக்கு உள்பட்ட அனைத்து குழந்தைகளும் பெற வேண்டும் என்பதாகும்.

- புலிகளை வேட்டையாடிவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழ்நாட்டில் புலிகள் இனமே அழிந்து விடும் என சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை செய்துள்ளது.
  - இந்தியாவில் வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் **1972**ல் நடைமுறைக்கு வந்து.
  - புலிகளை பாதுகாக்க இந்திய அரசு புலிகள் பாதுகாப்பு சட்டம் **1973**ல் இயற்றியது.
  - இந்தியாவில் **53** புலிகள் காப்பகம் உள்ளன.
  - களக்காடு முண்டந்துறை**,** ஆனைமலை**,** முதுமலை**,** சத்தியமங்கலம் ஆகிய **4** புலிகள் காப்பகங்கள் தமிழகத்தில் உள்ளன.
  - **2018** கணக்கெடுப்பின்படி **2,967** புலிகள் இந்தியாவில் உள்ளன.
  - தேசிய அளவில் புலிகள் இறப்பு விகிதத்தில் தமிழகம் **6**வது இடம் பிடித்துள்ளது.

- மித்ரா பூங்காவிற்காக விருதுநகர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.
  - இது இந்தியாவின் முதல் பிஎம் மித்ரா பூங்கா ஆகும்.
  - பிஎம் மித்ரா **–** பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை பூங்கா
  - இந்திய ஜவுளி தொழிலை வலுப்படுத்தும் நோக்கில் ஜவுளி அமைச்சகத்தால் **2021-**ம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம் ஆகும்.

- மகளிருக்கு ரூ.**1,000** உரிமைத் தொகை வழங்கும் திட்டம் செப்டம்பர் **15-**ல்

தொடங்கப்படும் என்று (**2023-24)** நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
  - இத்திட்டம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த தினமான செப்டம்பர் **15**-ல் (**15.09.2023)** தமிழக முதல்வர் தொடங்கி வைக்க உள்ளார்.
  - அண்ணாவின் பிறந்த நாள் அன்று தான் காலை உணவுத் திட்டம் (**15.09.2022)** தொடங்கப்பட்டது.

- கடல் மாசுபாட்டைக் குறைத்து, அதன் சூழலைப் பாதுகாப்பதற்காக ரூ.**2,000** கோடியில் "தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்" செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
  - கடல் அரிப்பை தடுக்கவும், கடல் மாசுப்பாடைக் குறைக்கவும், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும், இத்திட்டதை உலக வங்கி நிதியுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு செயல்படுத்த உள்ளது.

- ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், கோபிசெட்டிப்பாளையம் வட்டங்களில் உள்ள **80,567** ஹெக்டேர் வனப்பரப்பில் "தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்" அமைக்கப்பட உள்ளது.

- சிறந்த அங்கக வேளாண் விவசாயிக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்படும் என வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - இவ்விருதானது குடியரசு தினத்தற்கு வழங்கப்படுகிறது.
  - விருதுக்காக ரூ.**5** லட்சம் பரிசுத் தொகை அளிகப்படுகிறது**.**

- தமிழ்நாட்டின் ஊட்டி வர்க்கி, மணப்பாறை முறுக்கு, மானாமதுரை கடம், மயிலாடி கற்சிற்பங்கள் ஆகியவற்றிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் புதுமைப் பெண் திட்டத்தை தினமும் கண்காணிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
  - புதுமைப் பெண் திட்டம் – **05.09.2022**
    - மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை திட்டம் "மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
    - இத்திட்டத்தில் பெண்களின் உயர் கல்வி படிப்பிற்காக மாதம் 1000 ரூபாய் வழங்கப்படுகிறது
  - நம்ம ஊரு பள்ளி – **19.12.2022**
    - பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த செயல்படுத்தப்பட்டது.
  - சிற்பி திட்டம் – **14.09.2022**
    - மாணவர்களை நல்வழிப்படுத்த செயல்படுத்தப்பட்டது.
  - பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத்திட்டம் – **01.02.2023**

- அரசு பள்ளிகளை சீரமைத்தல், புதிய வகுப்பறைகள் மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்த செயல்படுத்தப்பட்டது.

❖ உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவின் தலைநகரமாக தமிழகம் விளங்குகிறது.
  - தமிழக அரசின் மூளைச்சாவு உறுப்பு மாற்று சிகிச்சை திட்டம் 05.09.2008-ல் தொடங்கப்பட்டது.
  - தொடர்ந்து 6 முறை உறுப்பு தானத்தில் சிறந்த மாநிலத்துக்காக மத்திய அரசின் விருதினை தமிழகம் பெற்றுள்ளது.
  - இந்தியாவிலேயே முதல்முறையாக **விடியல் எனும் முழு தானியங்கி செயலி** மூலம் உறுப்பு தான பதிவு நடைமுறை தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖

## இந்தியா

❖ 2022-23 ஆம் நிதியாண்டுக்கான நிதிப்பற்றாக்குறை இலக்கானது ஜனவரியில் 67.8% எட்டியுள்ளது என்று கணக்குகள் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (சிஜிஏ) தெரிவித்துள்ளது.
  - நிதிப்பற்றாக்குறை என்பது அரசின் செலவிற்கும் வருவாய்க்கும் இடையேயான வேறுபாடு ஆகும்.

❖ மார்ச் 1-ல் ஹரியானா மாநிலம் குருகிராமில் ஜி20 நாடுகள் கூட்டமைப்பின் ஊழல் எதிர்ப்பு பணிக்குழு கூட்டம் நடைபெற்றுள்ளது.

❖ இந்தியாவின் முதல்  மின்சார விரைவு சாலை டெல்லி-ஜெய்ப்பூர் இடையே அமைகிறது.

  - டெல்லி-மும்பை விரைவுச் சாலையின் ஒரு பகுதியாக அமைகிறது.
  - சூரிய ஒளியால் கிடைக்கும் மின்சாரத்தின் உதவியால் வாகனங்கள் இயங்க உள்ளன
  - சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு 26 சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
  - சென்னை – பெங்களூரு நகரின் இடையிலும் விரைவுச் சாலையிலும் அமைய வாய்ப்புள்ளது.

❖ ஜம்மு-காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தின் தலால்-ஹைமானா பகுதியில் “வெள்ளைத் தங்கமான லித்தியம் தாது” இருப்பதாக இந்திய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
  - லித்தியம் அதிகம் காணப்படும் பகுதி – பொலீவியா, அர்ஜென்டீனா, சிலி
  - சீனாவில் 70% லித்தியம் சுத்திகரிப்பு நடைபெறுவதால் சீனா உலகின் சுத்திகரிப்பு மையமாக  விளங்குகிறது.

❖ தஞ்சாவூர் ஓவியங்கள், மைசூர் சில்க் பட்டுப்புடவை, காங்ரா தேயிலை உள்ளபட 429 பொருள்களுக்கு இதுவரை புவிசார் குறியீடு (**GI**) அந்தஸ்து

வழங்கப்பட்டிருக்கிறது என்ற மத்திய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- மத்திய அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுக்கான (டிபிஐஐடி) துறை தனது 2022-23ஆண்டறிக்கையில் இத்தகவலை தெரிவித்துள்ளது.
- வெளிநாடுகளைச் சேர்ந்த 31 பொருட்களுக்கு புவிசார்குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ஓரிடத்தில் விளையக்கூடிய பொருள்கள் அல்லது தயாரிக்கக்கூடிய பொருள்களின் தரம் அந்த இடத்தில் காலநிலை, புவியியல் பகுதி, தனித்துவ தன்மை ஆகியவற்றின் அடைப்படையில் புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது.
- இதற்காக உருவாக்கப்பட்ட இந்தியாவின் "பொருள்கள் புவிசார் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 1999 என்ற சட்டம் 2003-ம் ஆண்டு செப்டம்பர் 15-முதல் நடைமுறையில் இருந்துவருகிறது.
- இந்த குறியீடு 10 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதன் பின்பு புதிப்பித்து கொள்ளலாம்.

❖ ஏப்ரல் 1 முதல் இந்தியாவில் ஹால்மார்க் அடையாள எண் பதிக்காத தங்க நடைகள், கலைப் பொருகள்களை விற்பனை செய்ய மத்திய அரசு தடை விதிக்கிறது.
- ஹால்மார்க குறியீடு பதிப்பு 2021-ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

❖ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டீகின் பல்கலைக்கழகம் குஜராத்தின் உள்ள கிஃப்ட் நகரத்தில் தனது கிளை வளாகத்தை அமைக்கிறது..
- இதன் மூலம் இந்தியாவில் கல்வி வளாகத்தை அமைக்கும் முதல் பல்கலைக்கழகமாக டீகின் திகழ உள்ளது.
- வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் கல்வி வளாகங்களை அமைப்பதற்கான விதிமுறைகளை பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) வகுக்கிறது
- யுஜிசி – 1956
- தலைமையிடம் – புது தில்லி

❖ மகாராஷ்டிர மாநிலத்தில் சந்திராபூர் மற்றும் யவத்மால் மாவட்டங்களை இணைக்க நெடுஞ்சாலையில் உலகில் முதல் மூங்கில் சாலையோர தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது.
- தற்சார்பு இந்தியா இலக்கை எட்டும் முயற்சியாக வாண்-வரோரா நெடுஞ்சாலையில் 200மீ நீளத்துக்கு உலகின் முதல் மூங்கில் சாலை விபத்து தடுப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.
- இதன் பெயர் – பாகுபலி
- பேம்புசா பல்கூவா என்ற மூங்கில் வகை பயன்படுத்தப்பட்டு அதன் மீது கிரியோசோட் எண்ணெய் மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்ட உயர் அடர்த்தி பாலி எத்திலீன் ஆகியவை பூசப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

❖ இந்தியா விமானப்படையில் தாக்குதல் பிரிவுக்கு ஷாலிஸா தாமி என்ற

பெண் அதிகாரியாக முதன் முதலாக நியமிக்கப்பட்டுள்ளார்
   - மேற்கு படைப் பிரிவுக்கான முதல் பெண் தளபதியாக நியமிக்கபட்டுள்ளார்.
   - இவர் இந்திய விமானப்படையின் முதல் பெண் விமான ஓட்டி பயிற்சியாளர்

❖ தனது மின்சாரத் தேவைக்கு முற்றிலும் சூரிய மின்சக்தியை பயன்படுத்தும் கிராமமாக ஒடிஸாவின் சுந்தர்கார் மாவட்டத்தில் உள்ள சகசாஹி கிராமம் திகழ்கிறது.
   - இக்கிராமத்தில் பழங்குடியினர் அதிகமாக வசிக்கின்றனர்.

❖ உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை 2022-ல் இந்தியா 135வது இடம் பிடித்துள்ளது.

❖ மார்ச் 10-ல் அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சி தொடங்கி 75ஆண்டுகள் ஆனதால் தனது பவளவிழா கொண்டாடுகிறது.
   - தொடங்கப்பட்ட ஆண்டு – 1906
   - உருவான இடம் – வங்கதேச தலைநகர் டாக்கா
   - தொடங்கியவர் – நவாப் சலீம் முல்லாகான்
   - நடத்தியவர் – முகமது அலி ஜின்னா
   - பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகு தலைவர் – காயிதே மில்லத்
   - இந்திய யூனியன் முஸ்லீம் கட்சி என பெயர் மாற்றம் – 1949
   - முதல் மாநாடு – ராஜாஜி மகால், சென்னை
   - பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முஸ்லீம் சமுகம் இணைக்கப்பட்டு 3.5% தனி இட ஒதுக்கீடு பெற காரணமாயிருந்தது.
   - சின்னம் – ஏணி

❖ இந்தியாவில் பட்டம் பெற்றிருந்தால் ஆஸ்திரேலியாவில் அங்கீகரிக்கபடும் என அந்நாட்டின் பிரதமர் அறிவித்துள்ளார்.
   - இந்தியாவின் 17வது மிகப் பெரும் வர்த்தக கூட்டமைப்பாக ஆஸ்திரேலியா திகழ்கிறது.

❖ கைவினைஞர்களுக்கு “பிஎம் விகாஸ்” (பிரதமரின் விஸ்வகர்மா கௌஷல் சம்மான்) திட்டம் அதிகாரமளிக்கும் என்ற பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.
   - இத்திட்டம் கைவினைஞர்கள் மற்றும் சிறுதொழில்களில் தொடர்புடையோரை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறது.
   - எளிதாக கடன் பெறுதல், திறன் மேம்பாடு, தொழில் நுட்பம் சார்ந்த ஆதரவு, எண்ம அதிகாரமளித்தல், வணிகப் பெயர் ஊக்குவிப்பு, சந்தைப்படுத்ததல் என ஒவ்வொரு “விஸ்வகர்மா”வுக்கும் (கைவினைஞர்கள்) அமைப்பு ரீதியிலான ஆதரவை அரசு உறுதி செய்யும். கைவினைஞர்களை மேம்படுத்தும் அதே வேளையில் அவர்களின் வளமையான பாரம்பரியத்தையும் இத்திட்டம் பாதுகாக்கும்.
   - பிரதமரின் தற்சார்பு நிதி (ஸ்வநிதி) திட்டம், வீதியோர வியாபாரிகளுக்கு பலனளிப்பது போல, பிஎம் விகாஸ் திட்டம்

கைவினைஞர்களுக்கு பலனளிக்கும் என்று கூறியுள்ளார்

- குஜராத்தில் ஏப்ரல் **17-26**வரை சௌராஷ்டிரம்-தமிழ் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.
    - காசி தமிழ் சங்கமத்தை அடுத்து இரண்டாவது நிகழ்ச்சியாக சௌராஷ்டிரா தமிழ் சங்கமம் தொடங்கப்பட்டுள்ளது.
    - **2022** நவம்பர் **18** முதல் டிசம்பர் **16** வரை வாரணாசிக்கும் தமிழகத்துக்கும் இடையேயான பழங்கால கலாச்சார நாகரிக தொடர்பை புதுப்பிக்கும் “காசி-தமிழ்ச் சங்கம்” நிகழ்ச்சி நடைபெற்றது.

- உலக அளவில் மனவிரக்தியில் தற்கொலை செய்து கொள்பவர்களின் பட்டியயில் இந்தியா **28%**வுடன் முதலிடம்.
- சீன நாட்டின் எல்லையில் பசுமை ஹைட்ரஜன் எரிசக்தி ஆலையை அமைக்க இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது.

- இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள காசநோய் பாதிப்பில் **5%** தமிழகத்தில் காணப்படுகிறது.
    - இந்தியாவில் அதிகபட்சமாக உத்திரபிரதேசத்தில் **20%** பாதிப்பு உள்ளது.
    - **2030-**ஆம் ஆண்டிற்குள் காசநோயை இந்தியாவை விட்டு விரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

- ஜி**20** கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வகித்து வரும் இந்தியா “ஒரே குடும்பம்**,** ஒரே உலகம்**,** ஒரே எதிர்காலம்” என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- பத்மா லட்சுமி கேரளாவின் முதல் திருநங்கை வழக்கறிஞர்-ஆக உருவெடுத்துள்ளார்.
- **2017-**ல் மேற்கு வங்கத்தை சார்நத் “ஜோயிதா மோண்டல்” இந்தியாவின் முதல் திருங்கை வழக்கறிஞர்-ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- மகாராஷ்டிரா மாநிலத்தில் “பசு நலவாழ்வு ஆணையம்” அமைக்க மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

- காரைக்கால் மற்றும் இலங்கையில் காங்கேசன் துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து**,** ஏப்ரல் **29-**ம் தேதி தொடங்கப்பட உள்ளது என அந்நாட்டின் துறைமுகங்கள்**,** கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துறை அமைச்சர் நிமர் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

- ஜம்மு-காஷ்மீரில் உள்ள ரியாஸி மாவட்டத்தில் பக்கல் மற்றும் கௌரி பகுதி இடையே செனாப் ஆற்றின் குறுக்கே ரூ.**1,486** கோடி செல்வில் “உலகின் உயரமான ரயில் மேம்பாலம்” கட்டப்பட்டுள்ளது.
    - நீளம் **– 1,315** மீ
    - உயரம் **– 359** மீ (ஆற்றுப் படுகையிலிருந்து).
    - ஜம்மு-காஷ்மீரில் உத்தம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இடையே ரூ.**35,000** கோடி மத்திப்பிலான ரயில் வழித்தட இணைப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக உலகின்

உயரமான பாலம் கட்டப்பட்டுள்ளது.
   - இந்த ரயில் பாதையை மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மார் **27**ல் ஆய்வு செய்தார்

## சர்வதேச நிகழ்வுகள்

- அமெரிக்கா, ரஷியா, ஐக்கிய அரபு அமீரக நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்களுடன் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் (**SpaceX)** சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்தது.

- மார்ச் **3**ல் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவா நகரில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டம் நடைபெற்றுள்ளது.
   - ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் என்பது ஐ.நா.சபை கட்டமைப்பிற்குள் **1946** முதல் செயல்படும் ஆணையமாகும்.
   - ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் இதன் பெயர் **2006-**ல் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- **2024-**ம் ஆண்டிற்கான **6**வது பிம்ஸ்டெக் உச்சி மாநாடு (**BIMSTEC)** தாய்லாந்தில் நடைபெற உள்ளது
   - **BIMSTEC – Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Corporation.**
   - இந்தியா, இலங்கை, வங்கதேசம், மியான்மர், தாய்லாந்து, நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் இதில் இடம் பெற்றுள்ளன.

- **5**வது ஆசியான்-இந்தியா வணிக உச்சி மாநாடு **2023** கோலாம்பூரில் நடைபெற்றுள்ளது**.**

- இந்தியா, ஜப்பான், அமெரிக்கா இணைந்து நடத்தும் மலபார் கடற்படைப் பயிற்சியை இந்த ஆண்டு (**2023)** ஆஸ்திரேலியாவும் இணைந்து நடத்தும் என ஆஸ்திரேலிய பிரதமர் ஆல்பேனசின் அறிவித்துள்ளார்.

- உலக வங்கியின் தலைவராக இந்திய-அமெரிக்கரான அஜய் பங்கா தேர்வாகிறார்.
   - உலக வங்கியின் தலைவராக உள்ள டேவிட் மால்பாஸ் வரும் ஜூன் மாதத்துடன் இப்பதவியில் இருந்து விலக உள்ளார்.
   - சர்வதேச நிதி அமைப்பான உலக வங்கியின் தலைமை பொறுப்பை வகிக்க உள்ள முதல் இந்திய-அமெரிக்கர், சீக்கிய-அமெரிக்கர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
   - **2016-**ல் “பத்மஶ்ரீ” விருதினை (இந்திய அரசின் **4**வது உயரிய விருது) பெற்றுள்ளார்

## விருதுகள்

- இலக்கியம், சமூக பணிகளில் சிறப்பாக சேவை செய்து வரும் ஆர்.கமலம்

சின்னசாமிக்கு "ஔவையார் விருது"-தமிழக அரசால் வழங்கப்பட்டது

- **90**வயதாகின்ற அவர் **43** நூல்களை எழுதியுள்ளார்.
- பாரட்டுச் சான்றிதழ்**, 8** கிராம் தங்கப்பதக்கம்**,** ரூ.**1** லட்சத்திற்கான காசோலையை அவருக்கு வழங்கப்பட்டது.

❖ தமிழக அரசு சேலத்தை சேர்ந்த ம.இளம்பிறைக்கு "பெண் குழந்தை விருது" வழங்கியது.

- அடுக்குமாடி குடியிருப்புகளில் மின்தூக்கி பழுதானபோது**,** அதை சரிசெய்ய புது கருவியை கண்டுபிடித்தற்காக வழங்கப்பட்டது.
- இவருக்கு ரூ.**1**லட்சத்திற்கான காசோலை**,** பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

❖ **"**காலா பாணி" நாவலுக்காக சாகித்திய அகாதெமி விருது தமிழக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியும் எழுத்தாளருமான மு.ராஜேந்திரன்-க்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ எழுத்தாளர் சிவசங்கரிக்கு **2022-**ம் ஆண்டுக்கான "சரஸ்வதி சம்மான்" விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

- **2019-**ல் வெளியான "சூரிய வம்சம் – நினைவலைகள்" என்ற நூலுக்காக இவ்விருது வழங்கப்படுகிறது.
- தமிழில் ஏற்கனவே இந்திரா பார்த்தசாரதி**,** அ.அ. மணவாளன் ஆகியோர் இவ்விருதினை பெற்றுள்ளனர்
- **1991-**ஆம் ஆண்டு முதல் கே.கே.பிர்லா அறக்கட்டளை சார்பில் சரஸ்வதி சம்மான் விருது வழங்கப்பட்டு வருகிறது.

- மார்ச 22-ல் தில்லியில் குடியரசுத்தலைவர் **பத்மஸ்ரீ, பத்ம விபூஷண், பத்ம பூஷண்** விருதுகளை வழங்கியுள்ளார்.
  - **பத்மஸ்ரீ விருது பெறுவோர்கள்**
    1. ஜி.வேலுச்சாமி – சித்த மருத்தவர், தமிழகம்
    2. மாசி சடையன், வடிவேல் – பாம்பு பிடிக்கும் பழங்குடியினர்
    3. குப்பையா கலயாணசுந்தரம் – பரத நாட்டிய குரு, திருவிடைமருதூர்
    4. டாக்டர் நளினி பார்த்தசாரதி – புதுச்சேரி
  - **பத்ம விபூஷண் விருது பெறுபவர்**
    - எஸ்.எம். கிருஷ்ணா – கர்நாடாகா முன்னாள் முதல்வர்
  - **பத்ம பூஷண் விருது பெறுபவர்**
    - தொழிலதிபர் கே.எம்.பிர்லா

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

❖ நானோ தொழில்நுட்ப அடிப்படையிலான திரவ டிஏபி உரத்தை அறிமுகம் செய்யவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என மத்திய ரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா அறிவித்துள்ளார்.

- டிஏபி – டை-அமோனியம் பாஸ்பேட்
- நானோ டிஏபியை தயாரிக்கும் நிறுவனம் – இந்திய விசாயிகள் உர கூட்டு நிறுவனம்.
- 2021-ல் இந்திய விசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம் (இப்கோ) நானோ திரவ யூரியாவை அறிமுகம்செய்ததை தொடர்ந்து நானோ டிஏபி உரத்தை அறிமுகம் செய்ய உள்ளது.
- மேலும் நானோ பொட்டாஷ், நானோ ஜிங்க், நானோ காப்பர் உரங்களையும் அறிமுகப்படுத்த இஃப்கோ திட்டமிட்டுள்ளது.
- நாட்டில் யூரியா உரத் தேவை 35 மில்லியன் டன்னாக உள்ள நிலையில் 25 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள உரம் இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

❖ மார்ச் **5**-ல் ஒலியின் வேகத்தை விட அதிகமான வேகத்தில் செல்லும் பிரமோஸ் ஏவுகணையை இந்திய கடற்படை அரபிக்கடலில் சோதித்துள்ளது.
- இந்திய-ரஷ்ய கூட்டுத் தாயரிப்பில் உருவாக்கப்பட்டது.
- ஒலியின் வேகத்தை விட மூன்று மடங்கு வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது.

❖ மார்ச் 8-ல் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவும், இந்திய ஆய்வு நிறுவனமுமான இஸ்ரோவும் இணைந்து அமெரிக்காவில் கூட்டாக உருவாக்கிய "நிஸார்" என்ற புவி கண்காணிப்பு செய்கைகோளை இஸ்ரோவிடம் அமெரிக்க விமானப்படை ஒப்படைத்தது.
- கலிஃபோர்னியாவில் உள்ள நாஸாவின் ஜெட் உந்துவிசை ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது.
- 2,800 கிலோ எடை கொண்டது
- "நாஸா இஸ்ரோ சிந்தடிக் அபெர்ட்சர் ரேடார் (நிஸார்) செயற்கைக்கோள் அமெரிக்க விமானப்படை யின்சி-17 விமானம் மூலம் பெங்களூருக்கு கொண்டு வரப்பட்டு இஸ்ரோவிடம் ஒப்படைக்கப்பட்டது,

❖ சாட்ஜிபிடிக்கு போட்டியாக "எர்னி" எனும் மென் பொருளை சீனா அறிமுகம் செய்துள்ளது.

❖ நிகழாண்டின் மத்தியில் சந்திராயன்-**3** ஆதித்தியா-எல்**1** விண்கலங்கள் ஏவப்பட வாய்ப்புள்ளதாக இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தெரிவித்துள்ளார்.
- நிலவில் ஆய்வு மேற்கொள்ள சந்திராயன்-**3** விண்கலம் முழுமையாக தயாராகிவிட்டது.
- இந்தியா சார்பில் முதன்முதலாக சூரியனை ஆய்வு செய்ய ஆதித்யா-எல்**1** விண்கலம் அனுப்பப்பட உள்ளது

❖

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ 2022-ம் ஆண்டிற்கான சிறந்த வீரராக அர்ஜென்டினா வீரர் லயோனல்

மெஸ்ஸி, சிறந்த வீராங்கனையாக அலெக்ஸியா புடெலாஸ் ஆகியோரை கால்பந்து சங்ககளுக்கான சர்வதேச சம்மேளனம் (ஃபிபா) அறிவித்துள்ளது.
    ○ மெஸ்ஸி 7வது முறை இவ்விருதினை பெற்றுள்ளார்.

❖ மத்தியபிரதேசம், சத்தீஸ்கர் மாநிலங்களில் நடைபெற்ற மகளிருக்கான தேசிய வாலிபால் போட்டியில் தமிழ்நாடு மகளிர் காவலர் அணி 2வது இடம் பெற்றுள்ளது.

❖ மார்ச் **15-26** வரை புதுதில்லி இந்திராகாந்தி விளையாட்டு வளாகத்தில் சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் (ஐபிஎஃப்) இந்திய குத்துச் சண்டை சம்மேளனம் (பிஎஃப்ஐ) சார்பில் உலகக் கோப்பை குத்துச்சண்டை சாம்பியன் போட்டி நடைபெற உள்ளது.

❖ செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்த உதவிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆண்டின் சிறந்த மனிதர் விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ நடப்பாண்டு மார்ச் 31-ம் தேதி முதல் மகளிருக்கான சர்வதேச தடகள போட்டிகளில் திருநங்கை போட்டியாளர்கள் அனுதிக்கப்பட மாட்டார்கள் என்று உலக தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது.

❖ தில்லியில் நடைபெற்ற மகளிர் உலக குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் நீது கங்காஸ், சவீதி போரா ஆகியோர் முறையே தங்களது எடைப்பிரிவல் உலக சாம்பியன் பட்டத்தை வென்று வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.
    ○ இந்தியாவுக்காக உலக சாம்பியன்ஷிப்பில் தங்க வென்றவர்கள் பட்டியலில் மேரிகோம் (**2022, 2018, 2010, 2008, 2006, 2005)** சரிதா தேவி (**2006), ஜெ**னி ஆர்.எல். (**2006),** லேகா கே.சி (**2006),** நிகாத்ஜரீன் (**2022)** ஆகியோருடன் நீது, சவீதியும் இணைந்துள்ளனர்.
    ○ நீது கங்காஸ் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

**முக்கிய தினங்கள்**

❖ மார்ச்-8ல் உலகமெங்கும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.
    ○ 1975-ம் ஆண்டை ஐ.நா. சபை சர்வதேச பெண்கள் ஆண்டு என அறிவித்தது.
    ○ 1977-ம் ஆண்டை முதல் உலகம் முழுவதும் மார்ச் 8-ம் நாள் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
    ○ உலகில் உள்ள **193** நாடுகளில் நாடாளுமன்றங்களில் பெண்கள் இடம் பெற்று இருக்கும் எண்ணிக்கையில் நமது நாடு **148**வது இடத்தை பிடித்துள்ளது என சர்வதேச நாடாளுமன்றங்களின் கூட்டமைப்பு (இன்டர் பார்லிமென்டரி யூனியன்) அறிவித்துள்ளது.
    ○ இந்திய நாடாளுமன்றத்தின் மக்களைவையின் **542** உறுப்பினர்களில் தற்போது **78** உறுப்பினர்கள் உள்ளன.
    ○ சுதந்திரதிற்கு பிறகு முதல் மக்களவையில் பெண்கள் பிரதிநிதித்துவம்

**24-**ஆக இருந்தது.

- கடந்த ஆண்டுகளில் நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் பெண்களுக்கான **33%** இட ஒதுக்கீடு கொண்டு வருவதற்கான மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- **1992-**ல் அரசியல் சாசனத்தின் **73**வது சட்டத்திருத்தின்படி பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் பொறுப்புகளில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் உற்பத்தி தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களில் **42%** பேர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள்.

- உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு தங்கம், வெள்ளி பொருள்களுக்கான விழிப்புணர்வு சென்னையில் நடைபெற்றது.
  - உலக நுகர்வோர் உரிமைகள் தினம் – மார்ச் **15**

- உலக சிட்டுக்குருவிகள் தினம் (மார்ச் **– 20).**

- உலக காடுகள் தினம் (மார்ச் **21**

- உலக மக்கள் தொகையில் **26%** பேர் பாதுகாப்பற்ற நீரைப் பருகி வருவதாகவும், **46%** பேர் அடிப்படை சுகாதர வசதிகளின்றி இருப்பதாகவும் ஐ.நா.வின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனஸ்கோ) வெளியிட்டட "உலக நீர் மேம்பாட்டு அறிக்கை **2023"-**ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - ஒவ்வொரு ஆண்டும் மார்ச் **22-**ல் "உலக தண்ணீர் தினம்" கடைபிடிக்கப்படுகிறது.
  - மார்ச் **22-**ல் ஐ.நா.சபை சார்பில் முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீர் குறித்தான மாநாடு அமெரிக்காவின் நியூயார்க்கில் தொடங்கியது
- காசநோய் ஒழிப்பு தினம் – மார்ச் 24
  - கருப்பொருள் : **"Yes, We can end TB"**
  - **மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ்** என்ற பாக்டீரியாவல் காசநோய் பரவுகிறது.
  - 24.03.1882-ல் ராபர்ட் காக் இதனை உறுதி செய்து உலகிற்கு அறிவித்தார்.
  - இந்த நாளைத்தான் உலக காசநோய் விழிப்புணர்வு நாளாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.
  - இந்தியா காசநோயை ஒழிப்பதற்கு "காசநோய் ஒழிப்பு நண்பர்கள்" (நிக்ஷய் மித்ரா) என்ற திட்டத்தின் மூலம் காசநோயாளிகள் தத்தெடுக்கப்படுகின்றனர்.
  - இத்திட்டத்தின் மூலம் காசநோயளிகளை தத்தெடுப்போர் அவர்களின் மருத்துவ சிகிச்சைக்குரிய தொகையை ஏற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.